# யாழ், மாத்தறையில் மருத்துவப் பீடங்கள்

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 8 ரபி அவ் 11 இதழ் 10
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-2-78

SRI LANKA
RECEIVED
1978-2-27
PERIODICALS DIVISION
LIBRARY

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED
1978-2-27
PERIODICALS DIVISION
LIBRARY

சன்சயின் சோப்
யாழ்ப்பாண பஜார் கடைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
இது ஒரு லாலா தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## பல்கலைக்கழக குழு சிபார்சு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலும், மாத்தறையிலும் மருத்துவ பீடங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்என்று பல்கலைக் கழகக் குழு சிபார்சு செய்துள்ளது.

மருத்துவ பீடங்கள் ஆரம்பிப்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்ட இரண்டு அங்கத்த

[6ம் பக்கம் பார்க்க]

# 'தேர்தலுடன் கலவரமும் தொடங்கப் போகிறது'

## சன்சோனி கமிஷன்

# பொலிஸார் நடத்தைபற்றி கிராமசேவகர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

**பொதுத்தேர்தலுடன் கலவரம்ஏற்படவிருப்பதால், யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மக்களை பாதுகாக்க அவர்களின் பெயர், விலாசங்கள் தேவை என்று பொலிஸார் வந்து தன்னிடம் கேட்டதாக சன்சோனி கமிஷன் முன் இந்துஇளைஞர் பேரவை சார்பில் சாட்சியமளித்த வண்ணார்பண்ணை கிராமசேவகர் திரு. கே. தனபாலசிங்கம் கூறினார்.**

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், சாட்சியத்தை வழிநடத்தினர்.

கே. தனபாலசிங்கம் சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: 77ம் ஆண்டு தேர்தலுக்கு 2கிழமைக்கு முன்னர், தமிழ்பொலிஸ் கான்ஸ்டபிள் மாணிக்கவாசகரும் மற்றும் 2சிங்கள பொலிஸாரும், என்னைவந்தோரில் வந்து சந்தித்தார்கள் அவர்கள் மூவரும் சிவில் உடையில் இருந்தார்கள்.

என்பிரிவில் உள்ள சிங்களவர்களின்பெயரும், விலாசமும் தேவையெனக்கேட்டார்கள்.

'ஏன்' என்று கேட்டேன்.

'தேர்தலுடன் கலவரம் துவங்கப்போகிறது ஆதலால் சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும்' என்று சொன்னார்கள்.

இதற்கு விபரப்பட்டியல் தேவைப்படுவதாகவும் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில், கலவரம் வராததும், தமிழர்கள் அப்படி கலவரம் செய்யமாட்டார்கள் எனசந்தேகிக்கிறீர்களா? என்று கேட்டேன்.

'எங்களுக்கு தெரியாது இது ஐ. ஜி. பி யின் உத்தரவு' என்று சொன்னார்கள்.

[6ம் பக்கம் பார்க்க]

## வீட்டைக் கொளுத்தி கடையில் கொள்ளை!

### விஸ்வமடுவாசி சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

விஸ்வமடுவில் என் வீட்டிற்கு தீ வைத்து கொளுத்தியதுடன் என் கடையும் நாசப்படுத்தினார்கள் என்று சான்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த விஸ்வமடுவைச் சேர்ந்த சின்னையா கந்தையா கூறினர்

சின்னையா கந்தையா மேலும் கூறியதாவது:

19-ந் திகதி என் கடை கொள்ளையடிக்கப்பட்டது. எனக்கு 7500 ருபா நஷ்டம் ஏற்பட்டது

என் வீட்டின் நஷ்டம் தெரியாது அது நான் கட்டவில்லை அது என் சொந்த வீடு இல்லை

இதுபற்றி நான் எழுத்து மூலம் கமிஷனுக்கு ஏற்கனவே அறிவித்தேன் [க]

## இந்த ஊழியர்களின் கதி என்ன?

(மட்டுவில்)

சிங்கள மொழியில் எட்டாம் வகுப்புப் பரீட்சையில் தேர்ச்சி பெருத தமிழ் விவசாய விஸ்தரிப்பு சேவையாளரின் வேலைக்கு மார்ச் மாதம் 31-ம் திகதியுடன் முற்றுப் புள்ளி வைக்கப்படுமா?

இவ்வாறு தமிழ் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் அச்சம் தெரிவிக்கிருர்கள்.

சிங்கள மொழியில் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெருத. தமிழ் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களை 1977 டிசம்பர் 31-ம் திகதியுடன் வேலை நீக்கம் செய்யப்படும் என்று ஏற்கனவே அரசாங்கத்தால் அறிவித்தல் கொடுக்கப்பட்டிருந்தது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்த தமிழ் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களுக்கு மூன்று மாத சேவை நீடிப்பு வழங்கினர். இச்சேவை நீடிப்பு மார்ச் 31ம் திகதியுடன் காலவதியாகிறது. [உ]

# 'ஸ்ரீ சோமாஸ் கந்தாவை பல்கலைக்கழகமாக்க வேண்டும்''

[யாழ்ப்பாணம்]

''புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரியைப் பல்கலைக்கழகமாக்கவேண்டும்'' என்றுகோப்பாய் எம். பி திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்படிகல்லூரியின் மின் இணைப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார். பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர் பழையமாணவர் சங்கத்தினர் ஆகியோரைக்கொண்ட இவ்விழாவில்திரு. கதிரவேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில், இக்கல்லூரியின் ஆதனங்களை விற்ருல் இதற்குச் சிறந்த கட்டிடங்கள் எழுப்புவதற்குத் தாராளமாகப் போதுமென்றும் இதற்கான வசதிகளைச் செய்து உதவுவதற்குத்தாம் எப்பொழுதும் தயாராகஇருப்பதாகவும் சொன்னர்.

கல்லூரி அதிபர் திரு. கனகராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய வடமாநிலக்கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கூறியதாவது:

''திரு. கனகரா இலங்கையில் இலவசக்கல்வித்திட்டத்தை ஆரம்பிக்குமுன் புத்தூர் மழவராயர் 1928ம் ஆண்டில் இலவசகல்வித்திட்டத்தை நிறைவேற்றக் கனவு கண்டார். பின்னர் அவரது மகன் மழவராயர் கந்தையா 1933ம்ஆண்டு இக்கல்லூரியை நிறுவி இப்பிரதேச மக்களுக்கு இலவசக் கல்வியை (முதன் முதல் இலங்கையில்) உதவினார்''.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அனைவரும் பாடுபட்டுஉழைக்க

[6-ம் பக்கம் பார்க்க]

குதூகலமான திறப்புவிழா

உங்கள் அபிமான
ராஜன் புத்தகசாலை
நிசமும்
1978 மாசி 20-ந் திகதி
(திங்கட்கிழமை) இன்று பகல் 12 மணியளவில்
யாழ். பஸ் நிலைய முன்பாக அமைந்துள்ள
J. M. C. கட்டிடத்தில்
திறக்கப்படவுள்ளது.
அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

ராஜன் புத்தகசாலை,
J. M. C பில்டிங்,
இல. 12, பஸ் நிலையம், 8558 யாழ்ப்பாணம்.

ஸ்ரீமகள் றேடர்ஸ் திறப்பு விழா

இன்று பகல் யாழ்ப்பாண தேசிய பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள்
மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

158, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
போன்: 7572

8564

இங்ஙனம்,
தங்கள் ஆதரவை நாடும்
ஸ்ரீமகள் றேடர்ஸ்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பேஜோ 404.கார் – 3 மீட்டர் சவ்பறி மொடல் [Safary Model] சமீபத்தில் லண்டனிலிருந்து இறக்குமதியானது விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எவ். சிவரத்தினம், 11/A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8554

காணி, அரியாலை, நாவலடி பஸ் ரேட்டிற்கு அருகாமையில், குடியிருக்க வசதியான 15 பரப்பு தென்னம் காணி, உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். க. கனகசபை, 30/30, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலை. 8543

குடைச்சாமியாரின் (கந்தையாசாமி) புகைப்படம் பிரதி 5 ரூபா. தேவையானோர் நேரில் பெற்றுக்கொள்ளவும். குணபோட்டோ (Guna Foto), குமரகோட்டம், கோண்டாவில். 8563

அறிவுப்பொழில் மலிவுப் பதிப்பு க. பொ. த. (உயர்தர) வகுப்பிற்குரிய இந்து நாகரீக வினாவிடை. மலிவு விலை 2/- ரூபா. 2-50க்கு தபாற்கட்டளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விபரங்கட்கு: ஆசிரியர், அறிவுப்பொழில், நெடுந்தீவு. 8560

## கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடுகள் சென்று இலக்கணம் இலக்கியம் (Literature) புத்தக சேவை (Library Service) (ஆங்கிலப்பேச்சு (Spoken English) பொது அறிவு கற்றுக்கொடுப்பார்கள். மதிய ஸ்தலத்திற்கு வருபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்படும். விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும். விளம்பர இல! 8258 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8258

## தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்கி அனுபவமுள்ள தொழிலாளர்களும், லொறியில் வேலை செய்யக்கூடிய தேர்ச்சியும், அனுபவமும் உள்ள கிளீனர்களும் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், இல: 31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8556

இனிப்பு, ரொபி தயாரிப்பதில் அனுபவமுள்ள ஆண்களும், பொம்மைவேலை; பிளாஸ்ரிக் பாக் பின்னுதல் வேலைகளில் நல்ல அனுபவமுள்ள பெண்பிள்ளைகள், மேற்பார்வையாளர் உடன் தேவை. 25-2-78 முன்பாக காலையில் நற்சாட்சிப் பத்திரத்துடன் வரவும். கண்ணா புறடக்ஸ், சுன்னாகம். 8549

க. பொ. த. ப (உ. த) வகுப்புக்களில் பொருளியல், வரலாறு பாடங்களைக் கற்பிப்பதற்குப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் தேவை. 24-02-78ற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். அதிபர், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், மிருசுவில். 8559

## 13ம் வட்டாரத்தில் நாளை புனரமைப்பு

[யாழ்ப்பாணம்]

13ம் வட்டாரத் தமிழ் இளைஞர் பேரவைக் கிளை நாளை செவ்வாய்க்கிழமை (சஞ்.யுவனியார் கோவிலுக்கருகில்)பற்றிமாகரன் இல்லத்தில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. [கி-அ]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பிஸ்கால் விற்பனை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர்,
19, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழக்கு இலக்கம் காசு/4580
எதிராக

1. கார்த்திகேசு சுப்பையாவும் பெண்
2. சிவகாமிப்பிள்ளையும், இருவரும்
   10-ம் வட்டாரம், புங்குடுதீவு.

எதிர்வாதிகள்

மேற்சொல்லப்பட்ட எதிர்வாதிகளிடமிருந்து வெலியாதில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 8880-39 சதமும், பிஸ்கால் செலவும், பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978-ம் ஆண்டு பங்குனிமாதம் 15-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு கிழக்கிறை "அங்கருயன் மணல்" நிலப்பரப்பு இலாச்சம் பதினைந்து (நி. பர 15) ஆனால் அளவின்படி நிலப்பரப்பு இலாச்சம் பதினேழு (நி. ப. 17) இதில் மேற்குப்பக்கமாக பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு இலாச்சம் பதினொன்று (நி. ப இலா 11) ஆனால் நிலஅளவையாளர் த. கந்தையா என்பவரால் 25-6-1966ல் 2230-ம் இலக்கத்தில் வரையப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு இலாச்சம் பதினொன்றும் குளி ஆறும் (நி. ப. இலா 11 குளி 6)ம் கட்டப்பட்ட கட்டிடமும், கிணறும் மற்றும் பயிர் வகைகளும் இந்த நிலப்பரப்பு இலாச்சம் பதினொன்று குளி ஆறும்(நி. ப இலா 11, குளி 6)க்கும் எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை பெண் பராசக்திக்குமுரிய ஆதனம், வடக்கு கிராமசபை ஒழுங்கையும் சுப்பிரமணியம் பெண் சிவக்கொழுந்துவுக்கும் உரிய ஆதனம், மேற்கு கார்த்திகேசு சுப்பையாவுக்குரிய ஆதனம், தெற்கு செல்லத்தம்பி பெண் செல்லம்மாவுக்கும், விசுவலிங்கம் பெண் இரத்தினத்திற்குமுரிய ஆதனங்கள். இதடங்கலும். இதற்குள் கட்டிமுடிக்கவிருக்கும் வீடும்.

பொன்னையா பாக்கியநாதன்
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்.
யாழ்ப்பாணம்,
15-02-78.

8553

## தங்கப் பதக்கம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட சைவசமயப் பாடப் பரீட்சையில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மாணவியான செல்வி ரமணி சியாமா நடராசா கூடுதல் புள்ளிகளைப்பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் நடத்திய இப்போட்டியில் இவர் 9-ம் வகுப்பு மேற்பிரிவுக்குரிய பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் எடுத்தார். [க]

## விதை வெங்காயம் விநியோகம்

[நெல்லியடி]

கட்டைவேலி-நெல்லியடிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு விதை வெங்காயம் வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இவ்வாரம் தொடக்கம் விதை வெங்காயம் விவசாயிகளுக்கு ருத்தல் ஐந்து ரூபா வீதம் வழங்கப்படும.

இதேவேளை கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தின் கீழுள்ள கிராமிய வங்கி, சில்லறை வியாபாரிகளுக்கு நாளாந்தம் சிறு தொகைக் கடனைத் தவணை முறையில் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கடன் தொகைகள் வழங்க ஆரம்பித்திருப்பதாக மேற்படி கிராமிய வங்கியின் கடன் முகாமையாளர் திருமதி மா. இந்துராணி தெரிவித்தார். [உ]

## வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துக்கும் ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையே ச்மரசப் பேச்சுவார்த்தை மூலம் 6 கோரிக்கைகளும் நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 16ந் தேதி ஆரம்பமாகவிருந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது. [கி-அ]

## கந்தபுராணப் படிப்பு

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 10ந் தேதி தொடக்கம் கந்தபுராணப் படிப்பு நடைபெற்றுவருகிறது மார்க்கண்டேயர் படலம் 26ந் தேதி நடைபெறவிருக்கிறது.

காலஞ்சென்ற சி. அகிலேசு புராணப் படிப்புக்கென ஒதுக்கிய நிதியை, அன்னாரது மகன் திரு. அ. சிவசம்பு காலாகாலமாக வழங்கிவருகிறாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நபிகள் பிறந்தநாள் விழா

[யாழ்ப்பாணம்]

மீலாத்கமிட்டியின் ஆதரவில் இன்றுஇரவுஎட்டுமணிக்குஐந்துமுற்சந்தியில் நபிகள் நாயகம் பிறந்த நாள் விழா கொண்டாட்டம் நடைபெற விருக்கிறது. முன்னைநாள் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம் ஜி. பஷிர் தலைமை வகிப்பார். மறுநாள் இரவு ரமேஸ் வைகுந்தநாதனின் இஸ்லாமிய பக்திப்பாடல் நிகழ்ச்சி நடைபெறும்.

# சுங்க உதவிக் கலெக்டர் நேற்றும் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

சுங்கப்பகுதி உதவி கலெக்டர் திரு. எஸ் எம் ஜேசெனரத்ன நேற்று சுமார் 3 மணி நேரம் சன்சோனி கமிஷன்முன் மீண்டும் வாக்குமூலமளித்தார்.

காலை 9-30 மணிக்கு ஆரம்பமான அவரது சாட்சியம், நண்பகல் 12-30 மணிக்கு முடிவடைந்தது.

மண்டபத்திற்குள் பத்திரிகை நிருபர்கள் உட்பட பார்வையாளர் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

விசாரணை நடைபெறும் போது நூலக மண்டப வாசலில் பொலிசார் காவல் நின்றனர்.

கமிஷனின் அழைப்பின் பேரில் நேற்று சாட்சியமளிக்க வந்திருந்த தமிழர் முற்போக்கு இயக்கத்தலைவர் திரு. யோகேந்திரா துரைச்சுவாமி நேரமின்மையால்நேற்றுசாட்சியமளிக்கவில்லை.

திரு. யோகேந்திரா துரைசுவாமி கமிஷன் தலைவர் திரு. எம். சி. சன்சோனியிடம் தான் சாட்சியமளிக்க வந்திருப்பதாக கூறியபொழுது வேறு ஒரு தினம் ஒழுங்கு செய்வதாக அவர் தெரிவித்தார்.

மார்ச் மாதம் 2-ம் தேதி சாட்சியமளிக்க வருமாறு திரு. யோ கேந்திராதுரைசுவாமிக்கு தெரிவிக்கப்பட்டது. திரு. யோகேந்திரா துரைசாமியுடன் அவரது மனைவியும் சட்டத்தரணி எஸ். செல்வராசாவும் வந்திருந்தனர்.

பெருந்திரளான மாணவர்களும், மாணவிகளும் மண்டபத்திற்கு வெளியில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்தனர்.

யாழ்ப்பாணம் எம்.பி திரு. வி. யோகேஸ்வரன், புனர்வாழ்வு கழகத்தலைவர் திரு. கே. சி நித்தியானந்தா ஆகியோரும் வந்திருந்தனர்.

தோட்டத்தொழிலாளர் சிலரும் நேற்று வந்திருந்தனர்

கொள்ளையடிக்கப்பட்ட

# பொருட்கள் முழுமையாக மீட்பு: பொலிசார் சாதனை

[யாழ்ப்பாணம்]

சுன்னாகத்தில் நடைபெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பான பொலிசாரின் புலன் விசாரணைகள் பூர்த்தி பெறும் நிலையை அடைந்துள்ளன.

மேற்படி சம்பவத்தில் கொள்ளையடிக்கப்பட்ட 'கசெற்' பதிவு நாடாவுடன் கூடிய வானொலி, கைக்கடிகாரங்கள் என்பனவும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரி. தாமோதரம்பிள்ளை இரவு பகலாக நடத்திய துரிதபுலன் விசாரணைகள் மூலம் கைப்பற்றப்பட்டு விட்டன.

கொள்ளையடிக்கப்பட்ட தங்கநகைகள் ஏற்கனவே கைப்பற்றப்பட்டு விட்டன.

மேற்படி 'கசெற்' கைக்கடிகாரங்கள் மீட்கப்பட்டது. தொடர்பாக வாலிபர் ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதுதொடர்பான அடையாள அணிவகுப்பு மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கொள்ளை தொடர்பாக ஏற்கனவே மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். [உ]

## "இளைய தலைமுறையின் கடமை"

[மட்டுவில்]

"ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அவர்களைச் சுற்றியுள்ள நூல்நிலையங்களிலேயே தங்கியுள்ளது மக்கள் அறிவின் ஆக்கத்திற்கு அத்திபாரமிடும் நூல் நிலையங்களை வளர்ப்பதில் நமது இளைய தலைமுறை ஊக்கமாக இருக்க வேண்டும்."

இவ்வாறு கல்வயல் கலைமகள் வாசிகசாலையின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்திய இளைப்பாறிய அதிபர் திரு. கே. சரவணமுத்து கூறினார்.

வாசிகசாலை மண்டபத்தில் இந்தக்கூட்டம் நடைபெற்றது. திரு. சரவணமுத்து தொடர்ந்து பேசுகையில் இன்று கிராமங்கள் தோறும் நூல்நிலையங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. இதைத் தொடர்ந்து மக்களின் அறிவும் வளர்ச்சியடைந்து வருகின்றன என்றார். [உ]

## பணிமனை

யாழ்ப்பாணம்]

யாழ், இலக்கிய வட்டத்தின் பணிமனையை ஸ்ரான்லி வீதியில் 20ம் திகதி இலக்கிய வட்ட போஷகர் திரு. க. தி. சம்பந்தன் திறந்து வைப்பார். [கி]

## மேலதிக பொறுப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரியாகவும் ஒரு மாதத்திற்கு கடமையாற்றுவார். உடுப்பிட்டி கல்வி அதிகாரியாக இருந்த திரு. வி. கே. சசுரபாதம் பாடசாலை நிர்வாக சேவைப் பயிற்சியின் பொருட்டு ஒரு மாத காலத்திற்கு கொழும்பு சென்றுள்ளதால் இவ் ஒழுங்கு முறை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. [கி]


## லோகநாதன் இன்ஸ்ரிரியூட்

166/1, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்

நடைபெறுகின்றன

G. C. E. O / L முழுநேர வகுப்புகள் (காலை, மாலை)
G. C. E. A / L மீட்டல் வகுப்புகள்
(1978 ஏப்ரல் பரீட்சை)
G. A. Q , I A. A. வகுப்புகள்
(சனி, ஞாயிறு மட்டும்)
SPOKEN ENGLISH (மாலை நேர வகுப்புகள்)

G.C.E. A|L 1979 ஏப்ரல்
பரீட்சை ஆரம்பம் (1-3-77)

8523

ஈழநாடு
The Eelanaadu

## பிரஜைகளுக்குள் வேறுபாடு

இலங்கைப் பிரஜைகளுக்கும் இலங்கை வம்சாவழிப் பிரஜைகளுக்குமிடையிலுள்ள வேறுபாடு நீக்கப்படுமென்றும் பதிவுசெய்யப்பட்ட இலங்கைப் பிரஜைகள் அனைவரும் எவ்வித அச்சமுமின்றி இந்நாட்டிலுள்ள ஏனைய பிரஜைகளைப் போல சுதந்திரமாக நாட்டில் இனி வாழலாமென்றும் நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் கூறியிருக்கிறார்.

இதற்கான பல புதிய சட்டங்கள் நீதி அமைச்சரின்சட்டச் சீர்திருத்தங்களின்கீழ் கொண்டு வரப்படுவதாகவும் நீதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

பதிவுப்பிரஜையா, வம்சாவழிப் பிரஜையா என்ற கேள்வி ஒழிந்துபோனால் பல பிரச்னைகள் நீங்கிவிடுமென்பது உண்மை.

ஒரு நாட்டின் பிரஜை என்று பிரமாணம் எடுத்துக்கொண்டபின் அவர் அந்த நாட்டின் பிரஜை என ஏற்றுக் கொள்வதுதான் உலக நீதி

ஆனால் இலங்கையில் மட்டும் பதிவுப்பிரஜை, வம்சாவழிப்பிரஜை என்ற வேறுபாடு இருந்துவருகிறது.

இந்த நாட்டின் பிரஜையான பின்னரும்கூட அவர்களுக்கு வாக்குரிமையில்கூட பாகுபாடு காட்டப்பெற்று வந்தது. குடியேற்றம் வேலை வாய்ப்புக்களிலும் பாரபட்சம் காட்டப்பெறுகிறது.

இந்த நாட்டின் பிரஜையான ஒருவரின் பிள்ளையின் பிறப்புப்பத்திரத்தில் இந்திய வம்சாவழிப் பிரஜையென்றே இன்னமும் பதிவு செய்யப்படுகிறது.

இந்தப் பாரபட்சங்களையெல்லாம் இந்த அரசு நீக்கிவிடுமானல் உண்மையான சுதந்திர நாடாக விளங்குவது மட்டுமல்லாமல் உலக நாடுகள் மத்தியிலும் அதன் மதிப்பு உயருமென்பது உறுதி.

வேலைக்கு மனுச்செய்யும் போதும் பிறப்புப்பத்திரத்திலும் 'என்ன சாதியம்?' என்றஒரு கேள்வி இடம் பெறுகிறது.

இதற்கு இலங்கைத் தமிழர், இந்திய வம்சாவழித் தமிழர், கண்டியச் சிங்களவர், இலங்கைச் சோனகர் என்பதுபோன்ற பதில்களே எழுதப்பட வேண்டும்.

இதுவும் மக்களுக்குள் வேறுபாடு ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கை என்றே கருத வேண்டும்.

'நாம் இலங்கையர்' என்ற எண்ணமே மக்கள் மனதில் நிலைபெற வேண்டுமானல் இன, மத பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே வேலைவாய்ப்பு, பிறப்புப் பதிவுப்பத்திரங்கள் போன்றவற்றில் 'என்ன சாதியம்' என்ற கேள்வியே நீக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

நீதிஅமைச்சர் இதுபற்றியும் பரிசிலனை செய்வது நல்லது.

ஒரு பத்திரிகைக்குஅளித்த பேட்டியொன்றிலேயே, பதிவுப் பிரஜைகள், வம்சாவழிப் பிரஜைகள் என்ற வேறுபாடு நீக்கப்படவிருப்பதாக நீதிஅமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

முன்னைய அரசாங்கத்திலிருந்த தமிழ்பேசும் அமைச்சர்களும் இப்படிப் பல பேட்டிகளில் பலபல வாக்குறுதிகளையும் அளித்தனர்.

## இன்று திருநபிதினம்

# நல்வழிகாட்டினர் நபிகள் நாயகம்

— திருமதி பாயிஸா சாலிஹீன் —

நபிகள் நாயகத்தை முஸ்லிம்கள் அனைவரும் அறிவர். ஏன்; உலக மக்கள் எல்லோரும் நன்கறிவர். அவர்கள் நமக்கெனக் காட்டிய வழியில் செல்லுவோமானல் இன்று உலகத்தில் காணப்படும் இன்னல்கள் யாவும் சுவடே இல்லாமல் மறையுமென்பதில் ஐயமில்லை

அண்ணலார், 63 ஆண்டுகள் வாழ்ந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் அன்பு, அஹிம்சை, ஆதரவு என்பனவே சுற்றிப் பின்னப்பட்டிருந்தன. அன்றைய அரேபியா தேசத்திற்கு, அரேபியா இருந்த சூழ்நிலையில் அண்ணலாரின் அன்பு, ஆதரவு எனும் கோர்வைகள் இன்றியமையாதனவாக இருந்தன.

ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன், இருள் சூழ்ந்த அரேபியாவிலே வழிகாட்டும் ஒளிவிளக்காய், அண்ணலார் அவதரித்தார். கருணை முகம், காந்தவிழிகள், அன்பு தவழும் பார்வை, ஆதரவைத் தரும் உருவம், காண்போர் உள்ளத்தை ஈர்த்து அவர்கள் பின்னே செல்லவைக்கும் ஓர் அதிசய சக்திகொண்ட வள்ளலாய் விளங்கினர்கள். இவ்வண்ணம் சகல குணங்களும் பெருமையோடு கொண்டிலங்கிய நாயகம் அவர்கள், தவருன பாதையில் சென்று, மாக்களாக விளங்கிய மக்கள் கூட்டத்தை, ''ஆண்டவன் ஒருவன். அவனே பெரியன்'' என்ற தத்துவப் பாதைக்கு அழைத்துவரச் சொல்லடிபட்டார்,கல்லடிபட்டார்,தாளாத இன்னல்கள் எல்லாம் தாங்கினர். பொறுத்தார். விரும்பாதனவற்றை மறுத்தார். மற்றையோர் பளுவைத் தாங்கினர். சொல்லொணு இன்னல்கள் மத்தியில் 'இஸ்லாம் எனும் சாந்தி மார்க்க விளக்கை' ஏந்தினர்.

சாந்தி எனும் ஒளி விளக்கு பெரும் பிழம்பாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. பெருமான் அவர்கள் காட்டிச் சென்ற வழியைப் பின்பற்ருமல், உலக முஸ்லிம்கள் இன்று தப்பான வழியில் செல்வதனல் அட்டூழியங்கள் பல நடக்கின்றன. எனினும் அவர்கள் மனித இனத்திற்கு ஒப்பற்ற வழிகாட்டியாக இன்றும் இருந்துவருகிருர்கள். முஸ்லிம்கள் நபி பிரானின் வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து! ஒழுகுவார்களேயானல் ஆத்மீக உணர்வுடன், நல்லொழுக்க சீலராய் மக்கள் வாழ்ந்து, சீர்குலைந்து அழிவுப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் உலகை நேர்வழியில் திருப்ப இயலும்.

எளிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து, ஏழைகளுக்காக வாழ்ந்த அண்ணலார், உயர் பதவிகள் எத்தனையோ அவரை நாடிவந்தும் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார்கள். எளிவ வாழ்க்கை வாழ்ந்தார் என்பதற்கு உதாரணமாக ''நான் இறையோனின் அடிமையே ஆவேன்; அடிமையே ஆவேன். எனவே ஓர் அடிமை போன்று உண்ணுகின்றேன்; அடிமை போன்று உட்காருகிறேன்'' அடிக்கடி கூறுவார்கள். அன்னர் கடைப்பிடித்த வீட்டு வேலை செய்தல், வீடு கட்டுதல், குறைவஎன சாப்பாடு.

எளிமையான உடை முதலானவற்றுடன் இன்று நாம் திருப்தி இல்லாமல் உடை, உணவு, பணம் என்பனவற்றுக்கு ஆலாய்ப் பறக்கின்ற நிலையை எண்ணிப் பார்க்கும்போது, வெட்கமாக, வேதனையாக இருக்கிறது.

'கிஸ்ரா கைசர்' போன்று வசதியாக வாழக்கூடாதா என்று உமர் கத்தாப் (ரலி) அவர்கள் கேட்க, ''கத்தாபுடைய மகனே! அவர்கள் உலகத்தைப் பெறவும், நான் ஆகிரத்தைப் பெறவும் உமக்கு நாட்டமில்லை'' என மொழிந்தார்.

பெருமானர் ஏழைகளுக்காக வாழ்ந்தவர். அடிமைகள் மீது இரக்கம் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாகப் பெண் இனத்தின் கண்ணியத்தை அரேபியாவில் நிலைநாட்டிய அவரது பெருவெற்றியை நாம் மறக்கமுடியுமா?

பிறந்தவுடன் பெண் சிசுவைக் குழிதோண்டிப் புதைக்கும் பழக்கத்தைப் பெருமானர் ஒழித்தார் பெண்களை அடிமையாக்கி, ஒருவன் பல பெண்களை மணக்கும் சட்ட பூர்வமற்ற முறையைத் தவிர்த்தார் பெண்ணினத்தின் கண்ணியத்திற்கு அவர் கூறும் நல்லுரைகள்:

''பெண்ணின் உரிமைகள் புனிதமானவை. அவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் சரிவர நிறைவேற்றப்பட்டனவா என்று கவனித்துச் செயல்படுங்கள்.''

''உங்கள் மனைவிமார் மீது உங்களுக்கு உரிமைகள் இருப்பது போல அவர்களுக்கு உங்கள் மீது உரிமைகள் உள''

''உங்கள் மனைவிமாரை அன்புடனும் அமைதியுடனும் நடத்துங்கள். அவர்களின் உரிமைகளைக்கவனியுங்கள்.'' [அ[

அவர்களைப் போல் சாத்தியமாகாத வாக்குறுதிகளை நீதி அமைச்சர் தேவநாயகம் அளிப்பாரென நாம் நம்பவில்லை.

## ஆசிரியருக்குக் கடிதம்:

# பொருத்தமற்ற குற்றச்சாட்டு

கடந்த 17-2-78 'ஈழநாடு' இதழில் திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் தமது நிலைமையை விளக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் எனது பெயரையும் குறிப்பிட்டுள்ளார்கள். அன்னரின் தகவலில் காணப்படும் முரண்பாடு பற்றியும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இன்றைய எனது நிலைப்பாடு பற்றியும் தெளிவுபடுத்தவேண்டிய அவசியத்தை அவ்வறிக்கை தோற்றுவித்துள்ளது. திரு. வி. பி. அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளரென எனது பெயரைக் குறிப்பிட்டுள்ளது தவருகும். கடந்த பொதுத்தேர்தலுக்கு முற்பட்ட காலத்தில் தான் நான் உடுப்பிட்டிக் கிளைச் செயலாளராக இருந்து வந்துள்ளேன். தேர்தல்காலத்தின்போதும் இன்றும் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ் மாவட்டக் குழு உறுப்பினனுகவே இருந்துவருகின்றேன்.

கடந்த பொதுத்தேர்தலின் போது உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டணி வேட்பாளர் திரு. த. இராசலிங்கத்துக்காக நான் உழைத்தேன் என்பது மறுக்கமுடியாத உண்மை. அதேசமயம் உடுப்பிட்டித் தொகுதியில் மாத்திரமன்றி வடபிரதேசத்தின் எந்தத் தொகுதியிலும் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் இன்னகட்சியைத்தான் ஆதரிக்கவேண்டுமென்று பணிக்கப்படவில்லை. நான் மாத்திரமன்றி உடுப்பிட்டித் தொகுதியின் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் பலர் திரு. த. இராசலிங்கம் அவர்களை ஆதரித்து அவரது வெற்றிக்காக உழைத்திருக்கிருர்கள்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உடுப்பிட்டிக்கிளையில் உடுப்பிட்டித் தொகுதியில் ஒரு கம்யூனிஸ்ட் வேட்பாளரை நிறுத்துவது சம்பந்தமாக ஆலோசித்தபோது திரு. இராசலிங்கம் அவர்கள் கூட்டணி வேட்பாளராக இருந்த

(5-ம் பக்கம் பார்க்க]

0 0 0

## கம்யூ. கட்சி மீள்பரிசிலனை செய்யுமா?

அவசரக்காரனுக்குபுத்தி மத்திமம் என்ற நிலை. இன்று இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ பிரிவு]க்கு ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையேயுள்ள சங்கிலிப்பாலம்அறுந்துவிட்டது. கிள்ளுக்கீரையைக் கிள்ளி எறிவதுபோல இன்று வி. பி. யைக் கட்சி எறிந்துவிட்டது. ஐந்து விரல்களில் பெருவிரலை இன்று வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி இழந்துவிட்டது.

மத்திய கமிட்டிக்கு மிகவும் தலையிடியைக் கொடுத்ததும் கொடுத்துக்கொண்டிருப்பதுமான இன்றைய தமிழர் பிரச்னைக்கு ஒரு முழுக்குப் போட வேண்டும். உண்மையான தேசிய நோக்குடன் கம்யூனிஸ்ட்கட்சி மக்கள் மத்தியில்

- [5ம் பக்கம் பார்க்க]

[5ம் கலத்தொடர்ச்சி]

முடிந்தால், ஈழத்துத் தமிழ் நூல்களின் விற்பனை பன்மடங்கு அதிகரிக்கும்.

இருதேச அரசாங்கங்களுக்கும் நல்லுறவுகள் அதிகரித்து வரும் இக்காலத்தில், பரஸ்பரம் இந்த உதவியையும் ஒத்துழைப்பையும் ஏன் செய்ய முடியாது?

ஈழத்திலே சில நல்ல தமிழ் கதைப் புத்தகங்கள் வெளியாகி இருப்பதாகவும், சில மட்டமானவையும் வெளிவந்துள்ளதாகவும், இனி கீழ்த்தரமான கதைகளை வெளியிடுவதைவிட்டு. தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தேவையான முதல்தரமான கதைகளையும் இலக்கியங்களையும் இங்கு வெளியிடவேண்டுமென்று அந்த அன்பர் கூறி, இலக்கிய பரிவர்த்தனையை இருநாடுகளுக்கும் தாராளமாக அதிகரிக்கவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினர்.

தேசிய அரசபேரவையில் உள்ள நமது தமிழ் பிரதிநிதிகள் இவ்விஷயமாக புதிய கவனம் செலுத்தினல் உறுதியாகப் பயனிருக்கும்.

மணிவாக்கு

எவன் நிலத்திற் பாடுபட்டுப் பயிர் செய்கிருனே அவனுக்கே அந்த நிலம் உண்மையில் உரியது.

— மகாத்மாகாந்தி

ஐயாறன்

சில ஆண்டுகளுக்குமுன் ரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் சுமார் 30க்கு மேலான ஈழத்துப் புதிய தமிழ் நூல்களை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து என்னிடம் கொடுத்தார்கள். சென்னையில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்குச் செல்லுகையில், அந்நூல்களை அங்கு அறிமுகம் செய்யும்படி, கேட்டார்கள். பல்லாண்டுகளாக தமிழ் நூல்கள் இங்கிருந்து தமிழகம் செல்லவோ. தமிழகத்திலிருந்து இங்கு வரவோ முடியாமல் தடுக்கப்பட்டிருந்த காலம் அது.

விமானமூலம் சென்னை சேர்ந்த மறுநாள் காலையிலேயே புதிய 'எம். எல் ஏ.' ஹாஸ்டலில் மகாநாட்டுக்காக வைத்திருந்த 'ஹக்கின் பாதம்' புத்தகக் கடை நிர்வாகியிடம், இந்நூல்களைக் கொடுத்தேன். அவற்றை ஆவலுடன் வாங்கிக் கொண்ட அவர், மாலையில் வரும்படி கூறினர். ஈழத்துப் பிரதிநிதிகளுக்கு அந்த விடுதியில்தான் இடமளித்திருந்தார்கள். மாலையில் அங்கு சென்றேன். எல்லா புத்தகங்களும் விற்பனையாகிவிட்டதாகவும், இன்னும் ஈழத்துப் புத்தகங்கள் இருப்பின் அவற்றை விற்பனைக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொண்டதுடன், புத்தகங்களின் விலைகளைக் கணக்கிட்டு, இந்திய ரொக்கப் பணமாகக் கொடுத்தார். (மகிழ்ச்சியுடன் ரசிகமணியும் இதைப் பெற்றுக்கொண்டார்)

ஈழத்துத் தமிழ் இலக்கிய நூல்களுக்கு தமிழகத்தில் எவ்வளவு கிராக்கியுள்ளதென்பதை அறிய முடிந்தது. அன்று நாவலர்பெருமான் பதிப்பித்த தமிழ் நூல்களுக்குத் தமிழகத்தில் இருந்த மதிப்பும் கிராக்கியும் இன்றும் தமிழகத்தில் இருப்பதைக் காணலாம். சமீபத்தில் சென்னையிலிருந்து ஒரு தமிழ் அன்பர். ஈழத்தில் உரையுடன் பதிப்பிக்கப்பட்ட கந்தர் அநுபூதி, திருவாசகம் முதலிய நூல்களை அனுப்பி வைக்குமாறு ஓர் அன்பர்மூலம் கேட்டிருந்தார். ஈழத்து அன்பரும் அவற்றை அன்பளிப்பாக பெருந்தன்மையுடன் அனுப்பிவைத்தார்.

இதை ஏன் சொல்லுகிறேன் என்ருல், தமிழகத்தில் ஈழத்து இலக்கிய நூல்களுக்கு இன்றும் எவ்வளவு மதிப்பு இருக்கிறதென்பதைக் காட்டத்தான்.

0 0 0

இலக்கியங்களுக்கான தடையை சமீபத்தில் நீக்கிவிட்டதும், தமிழகத்திலிருந்து பல கூடாத நூல்கள் இங்கு வருவதாகவும், ஈழத்தில் தமிழ் நூல் வெளியீடுகளின் விற்பனை பெரிதும் குறைந்துவிட்டதாகவும், மீண்டும் அத்தடையைப் போடவேண்டுமென்றும் ஓர் எழுத்தாள அன்பர் கவலையுடன் கூறினர்.

தமிழகத்தில் ஈழத்து இலக்கிய நூல்களுக்கு அதிக கிராக்கி இருப்பதாயும், இங்கிருந்தும் அவற்றை ஏன் அனுப்பி வைக்கக்கூடாதென்றும் கேட்டேன். இன்னும் அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை என்ருர்.

நல்ல நூல்களைத் தமிழன்பர்கள் எங்கிருப்பினும் வாங்குவார்கள். ஈழத்திலே சமீபகாலத்தில் முதல்தரமான சமய, இலக்கிய நூல்கள் பல வெளியாகியுள்ளதை அறிவேன். அவற்றை இங்கேயே மூலையில் வைத்து முடக்கிக் கொண்டிருப்பதில் பயனில்லை. நல்லபடி விளம்பரம் செய்து தமிழகத்தில் இவற்றை விற்பனை செய்ய ஒழுங்கு செய்ய வேண்டும். இலங்கை இந்திய வானெலிகளிலும் இவற்றை இலவசமாக விளம்பரம் செய்ய

[4ம் கலம் பார்க்க]

# எகிப்திய மாஜி மந்திரி சுட்டுக் கொலை!

## பாலஸ்தீனியர்க்கு எதிராக செயற்பட்டாராம்
### ஆயுதக்கோஷ்டி குற்றச்சாட்டு

லண்டன், பெப். 19
முன்னாள் எகிப்திய அமைச்சரும், "அல் அஹ்ரம்' பத்திரிகையின் ஆசிரியருமான ஜுஸப் யூசுப் செபாயின் ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்றினால் துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இவர் பாலஸ்தீனியர்களுக்கு எதிராகச் செயற்பட்டமையினாலேயே தாம் இவரைச் சுட்டுக் கொலை செய்ததாக ஆயுதம் தாங்கிய இருவர் அறிவித்துள்ளனர்.

ஆயுதம் தாங்கிய இக் கோஷ்டி பணயக்கைதிகளுடன் விமானம் ஏடென் நோக்கிச் செல்வதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

திரிப்போலியில் இவ்விமானம் இறங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

லெபனுனில் இவ்விமானம் இறங்குவதற்கும் பெய்றாட்டில் தடைவிதிக்கப்பட்டது.

ஜுஸப் செபாயின் பூதவுடல் இராணுவ மரியாதையுடன் தகனம் செய்யப்படவிருக்கிறது. [உ]

## நான்கு அரபு நாடுகள் கூட்டு நடவடிக்கை

ஆயுத உற்பத்தியில்

லண்டன், பெப் 19
நான்கு அரபுநாடுகள் ஆயுத உற்பத்தி தொடர்பான கூட்டு நடவடிக்கை பற்றிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன

எகிப்து, சவூதி அரேபியா உட்பட நான்கு அரபு நாடுகள் இப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. [உ]

## பங்களாதேஷ் அரசியல் கைதிகள் விடுதலையாவர்

டாக்கா, பெப் 19
பங்களாதேஷில் செவ்வாய்க்கிழமை தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்பட விருக்கிறது.

இதனையொட்டி அரசியல் கைதிகள் உட்பட 270 பேர் விடுதலைசெய்யப்பட விருக்கின்றனர். [உ]

...

## சென்னையில் சீன தூதுக்குழு உறுப்பினர்கள்

புதுடில்லி, பெப். 19
பாரதத்திற்கு விஜயம்செய்துள்ள 16 உறுப்பினர் கொண்ட தூதுக்குழுவில் மூவர் சென்னைக்கு விஜயம் செய்துள்ளனர்

சென்னை துறைமுகத்தை அவர்கள் சென்று பார்வையிட்டனர்.

வர்த்தகத்தொடர்புகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காகவே சீனத் தூதுக்குழு பாரதம் வந்துள்ளது. (உ)

## ஜே. ஆர். செவ்வாயன்று வருகிறார்

(கொழும்பு)
அணிசேரா நாடுகளின் உச்சிமா நாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு சிட்னி சென்றுள்ள ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வந்து சேர்வார் [உ]

## கார்ட்டர் எச்சரிக்கை

வாஷிங்டன், பெப். 19
அமெரிக்காவில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் தமது வேலை நிறுத்தத்தை நிறுத்திக்கொள்ளாவிடில் அவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (உ)

## "பிரி. துருப்புக்கள் வெளியேற வேண்டும்"

லண்டன், பெப் 19
வடஅயர்லாந்தில் இருந்து பிரிட்டிஷ் துருப்புகள் வெளியேறினால் அங்கு சமாதானத்துக்கு உள்ள முக்கியதடை நீங்கிவிடும் என்று வடஅயர்லாந்து பிரதமமந்திரி திரு. ஜெக்லீஞ்ச் தெரிவித்துள்ளார். (உ)

## சீனாவில் அரசியல் மாற்றம்

பீக்கிங், பெப் 19
சீனப் பாராளுமன்றம் இம் மாதம் 26-ம் திகதி கூடுகிறது.

சீனாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசியல் மாற்றங்களை பாராளுமன்றம் அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## இந்திராவுக்கு "தலைஅணைப் பாதுகாப்பு"

பெங்களூர், பெப். 14
பில்ஹார் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இந்திராகாந்தி பேசத் தொடங்கியதும், சரமாரியான கல்வீச்சு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்திராவைச் சுற்றி "தலைஅணைப் பாதுகாப்பு" அளிக்கப்பட்டது.

இந்திராகாந்தி பேசத் தொடங்கி மேடைமீது இருந்த நேரம், "புரட்சி மாணவர் இயக்கம்" கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்து, கோஷங்களை எழுப்பி "மியாவ், மியாவ்" என கூக்குரலிட்டனர்.

இந்திராகடுமையாக ஜனதா அரசைத் தாக்கியதும் இளைஞர்கள் கற்களை வீசினார்கள். இதனால் முன்னாள் அமைச்சர் பிரணப்முகர்ஜியின் கை உடைந்து இரத்தம் பாய்ந்தது.

நிலைமையைச் சமாளிக்க இந்திராவின் பாதுகாவலர் பெரிய பெரிய தலையணைகளைக் கொண்டுவந்து இந்திராவை சுற்றிப் பாதுகாப்பு அளித்தனர். நிலைமை மோசமாகவே இந்திரா அவசர, அவசரமாக காரில் ஏறிச் சென்றார். (கே-உ)

## "மக்கள் இடர் நீக்க ஜனதா அரசால் முடியாது"
— வை. பி. சவான்

ஹைதராபாத், பெப். 19
"ஜனதா அரசாங்கத்திடம் நாட்டில் நிலவும் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கக் கூடிய ஆக்கபூர்வமான திட்டம் எதுவுமில்லை" என்று பாரத லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பீ. சவான் குற்றஞ்சாட்டினர்.

ஹைதராபாத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் ஜனதா அரசுமீது இக்குற்றச்சாட்டை சுமத்தினர்.

மக்கள் கஷ்டத்தைப் போக்க ஜனதா அரசால் முடியாது என்றார் அவர். [உ]

''ஜனதா அரசு

## சிறுபான்மையினர்ஹரிஜனர் நலன் பேணும்"
— ஜெகஜீவன்ராம்

பம்பாய், பெப் 19
ஜனதா அரசாங்கம் சிறுபான்மையினரதும், ஹரிஜனரதும் உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராம் கூறினர்


பம்பாயில் நடைபெற்ற நிருபர்கள் மாநாட்டில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

நாட்டு நலன்பேணும் உருப்படியான திட்டங்கள் ஜனதா அரசிடம் இல்லை என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார். [உ]

இப்போது மென்மையான, செம்மையான, இதமான அநேகம் க்ஷவரங்கள் எடுப்பதற்கு

கிளாஸிக் பிளேட்

(பொலிமர் பூசிய ஸ்டெய்ன்லஸ் உருக்கு)




விநியோகத்தர்கள்:
உறவுஸ் அன்ட் புரொபர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்

RAVI

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
வைரநெஞ்சம்

நாகம்ஸ்
[சுன்னாகம்]
தினசரி: 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
துணிவே துணை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30 9-45,
சனி, ஞாயிறு 2-30
பேசும்தெய்வம்

RIO Daily 4 Shows
(Jaffna) Richard Harrison
in
Killers Are
Challenged

From; 18-2-78
Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Crazy Girls and the Funny Boy

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா, நாகேஸ்
அனாதை ஆனந்தன் (கலர்—புதியபிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 23-2-78 வரை
நீடிக்கப்பட்டுள்ளது
இன்ஸ்பெக்டர் மனைவி
24-2-78 முதல் ஜெமினி, பத்மினி,
ராதா நடித்த சித்தி

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஓம். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர்: விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

50-வது வெற்றி நாளை நோக்கி
ராணி வி. பி. கணேஷன் — சுபாஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
அமரர் செல்வநாயகத்தின் இறுதியாத்திரைக்
காட்சியும் கதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சாந்தி (யாழ். நகர்) • போன்: 7642
தினசரி 10-30, 2-30,6-30, 9-45
K. பாலச்சந்தரின்
எதிரொலி (புத்தம் புதிய பிரதி)
சனி, ஞாயிறு (25, 26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
BLACK MOUNTAIN

இரு தினங்கள் மட்டும்
வெலிங்டன் [.. நகர்]
தினசரி 4 காட்சிகள்
கல்யாணகுமார், தேவிகா
நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை
[புதிய பிரதி]

கொட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
போன் 7693
லிடோ முத்துராமன், சிவகுமார், சுஜாதா
(யாழ் நகர்) நடித்த
உறவு சொல்ல ஒருவன்

# ‘அகதிகளுக்கு வழங்கப்பட்ட காணிகள் தகுந்தவையல்ல’

## மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் ‘அமிர்’ புகார்

[யாழ்ப்பாணம்]

“அகதிகளுக்கு வழங்கப்பட்ட காணிகள் உகந்தவையாக இல்லை. முன்னர் தெரிவு செய்யப்பட்டவர்களால் கைவிடப்பட்ட காணிகள் இவை” என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டம் யாழ் அரசாங்க அதிபர் திரு. டபிள்யு ஏ. எல். விஜயபால தலைமையில் நடைபெற்றது.

ஏனைய எம். பி க்களும் கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர்.

அகதிகளுக்குப் போதிய பங்கீடு இல்லை, போதிய நிதியுதவியும் கிடைக்க வழிசெய்யப் படவில்லை என்றும் திரு. ஏ அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டினார்.

கிளிநொச்சி மாவட்டக் காணி அதிகாரி ஜனாப் மக்பூல் குறைபாடுகளை நீக்குவதற்கான மார்க்கங்களை எடுத்துக் கூறினார். முதலாவதாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருடைய பிரேரணை எடுக்கப்பட்டது. அதன்படி கமக்காரர் கிணறு தோண்ட வேண்டிய வெடிமருந்துகளைப் பெற பர்மிட் கொடுபடவேண்டும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ்கிராம அபிவிருத்திச்சங்கக் கிணறு வேலைகளை நிறைவேற்ற ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கப் படாமைக்கு ஒரு காரணம் வெடிமருந்து கொடுபடாமை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை ஆதரித்துபாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பருத்தித்துறைக்கு நவீன பஸ்தரிப்பு நிலைய வேலையைத் துரிதப்படுத்த இபோச பருத்தித்துறை நகரசபை, பெருந்தெருக்கள் இலாகா கூட்டாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற உதவி அரசாங்க அதிபர் திரு மார்க்கண்டுவின் அறிக்கை ஏற்கப்பட்டது.

பருத்தித்துறைக்கு ஒரு விளையாட்டு மைதானம் வேண்டும் என்ற அவரது பிரேரணையும் ஏற்கப்பட்டது.

மேலும் குடத்தனை கிராம சபைப்பிரதேசத்தில் உள்ள மணற்காட்டு ரேட்டு வேலையில் ஏற்பட்ட தடைகளை நீக்கி வேலைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற அவரது பிரேரணையும் நிறைவேற்றப்பட்டது.

நாகர்கோவிலையும் எழுதுமட்டுவாளையும் இணைக்கும் பாலம், கட்டும் வேலைக்கு போதிய நிதி இருந்தும் அது இதுவரை நிறைவேற்றப்படாததையிட்டு விவாதிக்கப்பட்டது. உதவி அரசாங்க அதிபர் இவ்வேலையை பாலம் கட்டும் இலாகாவிடம் பாரப்படுத்தினால் நல்லது என்று ஆலோசனை கூறினார்.

மற்றும் குடத்தனை கிராம சபைப் பகுதிக்கும் முழு அல்வாய்ப்பிரதேசத்துக்கும் ஒவ்வொரு மத்திய மகாவித்தியாலயம் தேவை என்றும் ஆலோசனைகளில் உதவி அரசாங்க அதிபர் திரு. த மார்க்கண்டு கேட்டுள்ளார்.

உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளராகவும் மேலதிக அரசாங்க அதிபராகவும் இருந்து அரசாங்க சேவையில் ஓய்வு பெறவுள்ள திரு. ஏ ஏ. ஜோசப்பின் நீதி, நியாயம், பாரபட்சமற்ற சேவைக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

### பொருத்தமற்ற

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிலும் பின்தங்கிய ஒரு சமூகத்தில் இருந்துவருகின்றவர் என்ற காரணத்தினால் அன்னாருக்கு எதிராக எங்கள் கட்சி இத் தொகுதியில் போட்டியிடுவதில்லையென்ற தீர்மானத்துக்கு வந்தது. இந்த முடிவு வெளிப்படையாகத் தெரிவிக்கப்படாத ஓர் உடன்பாடென்பதைத் தோழர்கள் உணர்ந்து திரு. இராசலிங்கம் அவர்களை ஆதரித்தார்கள்.

இதனை ஓர் உதாரணமாகக் கொண்டு திரு. வி.பி. அவர்கள் என்னையும் ஓர் எடுத்துக்காட்டாக உதாரணத்துக்கெடுப்பது பொருத்தமற்றதாகும்.

செ. சதானந்தன்:
(இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உடுப்பிட்டிக் கிளை, முன்னாள் செயலாளர்).

### கம்யூ. கட்சி

[3ம் பக்கத் தொடர்ச்சி]

உலாவவேண்டும் என்ற நன்னோக்குடன் போராடிக்கொண்டிருந்த வி. பி. யைக் கட்சி நீக்கியதைத் தொடர்ந்து உண்மையில் முதலாளித்துவக்கட்சிகள்தான் வகுப்புவாதம் பேசுபவர்களல்ல; உண்மையான இடதுசாரிக் கட்சிகளாகிய-கம்யூனிஸ்ட்கட்சியாகிய நாங்களும்தான் -கம்யூனிஸ்ட்கட்சி நிரூபித்துள்ளது. தேசிய மொழிகளான சிங்களம், தமிழ் இவற்றில் தமிழைக் கற்று (ஏறக்குறைய 30 வருடத்துக்கு மேலாகக் கற்றுவருகிறார்கள்) பிரசாரம் செய்யமுடியாத தலைவர்கள் அன்றும் தமிழைத் தேசியமொழியாக ஏற்கவில்லை இன்றும் இவர்கள் ஏற்கப் போவதும் இல்லை. ஆனால் ஒன்றை மட்டும் துணிந்து செய்கிறார்கள், அன்று அருவருப்புடன் ட்ரொஸ்கியை விரும்பாதவர்கள் இன்று ட்ரொஸ்கியை விரும்பும் போது தமிழ்மக்களின் இன்றைய சூழ்நிலையில் கட்சிக்குள் போராடிய வி. பி. யை நீக்கியது சரியா? இது முறையா? மீண்டும் இதனைப் பரிசீலனை செய்வீர்களா?

சோ. மகேஸ்வரன்
பொதுவுடைமை அனுதாபி
உண்ணாப்பிலவு,
முள்ளைத்தீவு.

# குற்றச்சாட்டுகள் நிரூபணமாகின!

## வி. பி. யை நீக்கியது பற்றி கம்யூ. கட்சி விளக்கம்

[கொழும்பு]

“திரு. வி. பொன்னம்பலம் கட்சி அங்கத்தவராக இருந்த அதேவேளையில் பொதுக்கூட்டங்களில் கட்சியையும் அதன் கொள்கைகளையும் கண்டித்து வந்தார். கட்சி யாப்பிற்கும் அதன் அங்கத்தவர்களின் கோட்பாடுகளுக்கும் முரணான செயல்களில் ஈடுபட்டார்”

இவ்வாறு திரு. வி. பியை கட்சியை விட்டு விலக்கியது பற்றி கம்யூனிஸ்ட் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய கமிட்டி திரு. வி. பொன்னம்பலத்தை 1977 ஜூன் மாதத்தில் கட்சி அங்கத்துவத்தில் இருந்து இடைநிறுத்தம் செய்திருந்தது.

இவ்விடயம் மத்திய கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு அறிவிக்கப்பட்டது. இக் கமிஷன் மத்தியகமிட்டியினால் அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரித்தது.

இக் குற்றச்சாட்டுகள் பின்வருவன தொடர்பானவை: 1977 பொதுத்தேர்தலில் பிறிதோர் கட்சியின் அபேட்சகரை முன்வைத்து செயலாற்றியமை கட்சி ஒழுங்குகளைத் தொடர்ந்து மீறியமை கட்சி அங்கத்தவராக இருக்கும் அதேவேளையில் பொதுக்கூட்டங்களில் கட்சியையும் அதன் கொள்கைகளையும் கண்டித்தமை கட்சி யாப்பிற்கும் அதன் அங்கத்தவர் கோட்பாடுகளுக்கும் முரணான செயல்களில் ஈடுபட்டமை

இக் குற்றச்சாட்டுகளை விசாரித்தும் அத்தாட்சிகளைக் கேட்டதன் பின்னர் மத்திய கட்டுப்பாட்டுக்கமிஷன் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தது.

கட்டுப்பாட்டுக்கமிஷன்மூன் ஆஜரான திரு. பொன்னம்பலம் தனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகளில் பெரும்பாலானவற்றை ஏற்றுக்கொண்டார்.

12-2-78ல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கட்டுப்பாட்டுக் கமிஷனின் அறிக்கையைப் பரிசீலனை செய்தது. கட்டுப்பாட்டுக்கமிஷனின் முடிவுகளையும் இக் கூட்டத்தின் முன்னர் கட்சி தலைமைப்பீடங்களுடன் பேசுவதற்கு அளித்த சந்தர்ப்பங்களை திரு. பொன்னம்பலம் பாவிக்கத் தவறியதையும் கருத்திற்கொண்டு அவரை கட்சி அங்கத்துவத்தில் இருந்து வெளியேற்றுவதென மத்திய கமிட்டி ஏகமனதாகத் தீர்மானித்தது. ...... (உ)

### கொழும்பில் சிவாஜி

(கொழும்பு)

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நேற்று முன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தார்.

நடிகர் திலகத்தின் ‘பைலட் பிரேம்நாத்’ படத்தில் நடிக்கும் நடிகர் குழு ஒன்றும் வந்தது நாளை மறுதினம் இப்படத்துக்கான படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகும். (இ)

### அராலிக் கிராம தேவைகள்

[அராலி]

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு அராலி கிராமத்தின் தேவைகள் குறித்து அராலி தெற்கு-கிழக்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றினை நடத்தினார்.

# "தமிழ்க் காங். அங்கீகாரம் இழக்கும் அவசியமில்லை"

## வவனியா எம். பி. சொல்கிறார்

[வவனியா]

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் 1947 ம் ஆண்டு முதல் இயங்கிவருகிறது. கடந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டதால், தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட முடியாத நிலையிருந்தது. இதனால் தமிழ்க் காங்கிரஸ் அங்கீகாரத்தை இழந்துவிட எந்தவித அவசியமும் இல்லை.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், வவனியா எம். பியுமான திரு. தா. சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விஷயமாக தேர்தல் ஆணையாளருக்கும், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும், தானும் கூட்டாக ஒரு கடிதம் அனுப்பியிருப்பதாகவும் அவர் கூறினார்.

இதே சமயம், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி இணைச் செயலாளர் திரு. த. மகேந்திரராசா, தமிழ்க் காங்கிரஸை அரசியல் கட்சியாக அங்கீகரிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளரை கோரியுள்ளார்.

வாலிப முன்னணி குழு ஒன்று, இவ்விஷயமாக தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை நேரில் சந்திக்கவிருக்கிறது. இக்குழுவினர் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்தையும் இவ்விடயமாக சந்திக்கவிருக்கின்றனர். (க. உ)

இவராத்திரிவிழா:

# மன்னார் இ.போ.ச. ஊழியர் தாக சாந்திசேவை

[அரியாலை]

இலங்கைப் போக்கு வரத்துச் சபை மன்னார் டிப்போ திருக்கேதீஸ்வரம் மகா சிவராத்திரி தண்ணீர்ப் பந்தல் சபையினர் எதிர்வரும் மகா சிவராத்திரி விழாவின் போது தண்ணீர்ப்பந்தல் நிறுவி அடியார்களுக்குத் தாக சாந்திக்கு உதவுவதென ஏகமனதாக முடிவு செய்துள்ளனர்.

மேற்படி சபையின் வருடாந்தக்கூட்டம் டிப்போ உதவி அத்தியட்சகர் திரு.ஏ. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

சபையின் புதிய நிர்வாகிகளும் தெரியப்பட்டனர். காப்பாளர்களாக திருவாளர்கள் ஏ. யோகராசா, எச். எம். ஏ. சமரநாயகா ஆகியோரும், தலைவராக திரு. து. உமாபதிசிவமும் இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் ம. சந்திரசேகரம் ச. சண்முகநாதன் ஆகியோரும் இணைப்பொருளாளர்களாக திருவாளர்கள் ஈ. எல். இராஞ்சயா, தே. சுந்தரலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் உறுப்பினர்களாக 13 பேர் தெரிவாயினர். (அ)

# இன்று

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களான எட்டு இயக்குநர்கள் உட்பட 14 உறுப்பினர்கள் கொண்ட தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை இன்று பிற்பகல் பதவியேற்கிறது.

இதன் தலைவராக திரு. சி. சிவமகாராஜா பதவியேற்பார்.

இவர் தமிழ் இளைஞர் பேரவை த. வி. கூட்டணியின் முக்கிய பிரமுகராவார்.

தொழிலாளர் பிரதிநிதி ஒருவரும் இயக்குநராகத் தெரிவு செய்யப்படவிருக்கிறார். குறிப்பிட்ட எட்டு உறுப்பினர்களைத் தவிர ஏனைய ஐவரும் மக்களால் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இன்று எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. ஏ. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும் பிரதம அதிதிகளாகக் கலந்துகொள்வர். [உ]


விற்பனைக்கு

7 SRI HILMAN AVENGER SALOON

குறைந்த பாவனை
நல்ல நிலைமை
20-2-78 திங்கட்கிழமை
பார்வையிடலாம்.

56, மூன்றும் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

8565


# புதியதொரு வீடு

இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இரு காட்சிகள் நடைபெறவுள்ள நாடகம் 'புதியதொரு வீடு'. இது புதியதொரு நாடகம். புதிய நாடக உத்திகளும், கள ஆய்வு அனுபவமும், ஈராண்டில் இளம் கலைஞர் மேற்கொண்ட ஆராய்ச்சி, அறிவு, திறமை மனப்பாங்கு என்பனவும் ஒன்றுசேர்ந்து சிறந்த கலைஞர்களின் நெறியாக்கத்தில் உருவான இந்நாடகம், நாடக உலகில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்த வல்லது. நாடகக் கலையின் நயங்களையெல்லாம் ஒருங்கே கண்டு மகிழ விழையும் நாடகச் சுவைஞர்க்கு நல்லதோர் கவினக் கலைவிருந்தாக அமையும் பெற்றியது.

இந்நாடகம் உருவான பின்னணி, பல முக்கிய நிகழ்ச்சிகளைக் கொண்டது. நாடகத்தினை ஒரு வெகுசனத் தொடர்புச் சாதனமாகக் கருதலாம். நடைமுறைப்பயனுள்ள நாடகத்தை தமதுசெய்திட்டமாகக் கொண்டனர் இளவாலை புனித ஹென்றீஸ் கல்லூரித் தேசிய உயர் கல்விச் சான்றிதழ் வகுப்பு மாணவர்கள். விஞ்ஞான மாணவரும் கலை மாணவரும் இதில் ஈடுபட்டதால் விஞ்ஞான ஆய்வு முறைகளும் கலைத்துறை மாணவரின் கலை ஆர்வமும் ஒன்றிணைந்து செய்திட்டத்தினைச் சிறப்பாக ஈராண்டு தொடர்ந்து நடாத்தினர். இவர்களது கவின்கலை மன்றம் நாடக இலக்கியத் துறையினை முழுமையாக ஆராய்ச்சி செய்ய ஆர்வம் மிக்க மன்ற வழிகாட்டிகளாக அமைந்த ஆசிரியர்கள் திரு. பி. ஏ. ஸி. ஆனந்தராசா திரு. பி. ஏ. அன்ரன் இராசயோகம் ஆகியோர் அயராது உழைத்தனர். அவர்களது வழிகாட்டலில் நாடகத்துறையில் தலைசிறந்த ஆசிரியரும் கலைஞரும் அண்ணாவிமாரும் தருவிக்கப்பட்டு நேர்டியாக அவர்களது அனுபவத் திறமைகளையும் கருத்துக்களையும் கவின்கலை மன்றத்தினர் பெற்றுக்கொண்டனர். ஈழத்தில் நாடகத்துறையிலுள்ள தலைசிறந்த கவிஞர்களெல்லாம் இம்மன்ற மாணவர்களால் தொடர்பு கொள்ளப்பட்டனர் மறைந்து வரும் "கூத்து" மரபினுக்குப் புத்துயிர் கொடுத்து வாழ்விக்கும் வகையில் அண்ணாவிமார் அணுகப்பட்டனர். மாணவர் தாம் பெற்ற அறிவினைக் கூத்தாகவும் நாடகமாகவும் இவ்விராண்டுகளில் மேடையேற்றினர்.

இவர்களது அயராத முயற்சியின் பயனைச் சிறந்த நாடகங்களாகவும் கூத்துக்களாகவும் கண்ட மக்கள், சென்ற வருடம் செப்டம்பர் மாதம் 16, 17ந் திகதிகளில் நாடகக் கண்காட்சியினைக் கண்டுகளிக்கும் அரிய சந்தர்ப்பத்தினைப் பெற்றனர். நாடகத்துறை சம்பந்தமாக இடம்பெறக்கூடிய சகல அம்சங்களும் இக்கண்காட்சியில் இடம்பெற்றன. இக்கண்காட்சியைக் கண்டுகளித்த பல்லாயிரம் சுவைஞர்களில் ஒருவரான கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை 25-9-77 "ஈழநாடு" தினசரியில் வெளியிட்ட திறனாய்வு இக்கண்காட்சியின் சிறப்புக்கு ஒரு சான்றிதழாக அமைந்தது. துறைபோன கலைஞரான கலைப்பேரரசின் கருத்துக்களை வைத்துக்கொண்டு இக்கல்லூரி மாணவரின் கலையார்வத்தினையும், திறமையினையும் மகத்தான நாடகத்துறைச் சாதனையென்று கூறுவதில் தயக்கம் வேண்டியதில்லை. ஆய்வுகளிலும் பயிற்சிகளிலும் இடைவிடாது ஈடுபட்டுவரும் இம்மாணவர்களின் முயற்சிகள் கல்வித் திட்டம் மாறினும் மாறாது தொடருமென அறியும்பொழுது நாமெல்லாம் இவ்விளங் கலைஞர்களுக் கடப்பாடுடையோம் என்ற உணர்வுதோன்றுகிறது "கல்வி

சமூக மரபினைப் பேணிக்காப்பதோடுமாத்திரம் நின்றுவிடாது அதனை மேலும் சிறப்புறுத்தி அடுத்த பரம்பரையினருக்கு உதவவேண்டும்" என்னும் கல்விக் கோட்பாட்டுக்கமையச் செயற்பட்டுவரும் இக் கல்லூரிக் கவின் கலைமன்றம் இந்நாட்டு நாடக இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றது. இத்துணை மகத்தான சமூகத்தொண்டில் ஈடுபட்டுள்ள இக்கல்லூரி அதிபர் அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகளினதும் உப அதிபர் அருட்திரு ஐஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளினதும் ஆசிரியர்களினதும் கவின் கலை மன்றத்தினரதும் நாடக முயற்சிக்கு உதவுதல் பெரும் இலக்கியத் தொண்டாகும். உதைபந்தாட்டத்தில் அகில இலங்கைப்புகழினை அண்மைக் காலத்தில் பெற்றுக்கொண்டு சாதனை நிகழ்த்திவரும் இக் கல்லூரி நாடகத்துறையினைச் செய்திட்டமாக எடுத்துக் கொண்டு மற்றுமோர் அரிய சாதனையினை நிகழ்த்திவருவது பாராட்டுக்குரியது.

—ஆர். எஸ். நடராஜா.
விரிவுரையாளர்,
பலாலி ஆசிரிய கலாசாலை,

# மனைவியைக் கொன்றவருக்கு மரணதண்டனை

[காலி]

இளம் மனைவி பத்மலதா ஜெயசேகராவை கொலை செய்ததாக மகிந்தலையைச் சேர்ந்த பி. எச். ஹெக்டர் என்பவர் மீது காலி உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் எதிரியை குற்றவாளியென ஜூரிகள் ஏகமனதாக தீர்மானித்தமையால் காலி உயர் நீதிமன்ற நீதிபதி பி. இ. டி. இல்வா அவருக்கு மரண தண்டனை விதித்தார். [அ]

......

# தேவைப்படின் சிகரட் இறக்குமதியாகும்

— அமைச்சர்

[காலி]

சிகரட் தட்டுப்பாடு நீடிக்குமானால் வெளிநாடுகளிலிருந்து சிகரட் இறக்குமதி செய்யப்பட்டு பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் என்று வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி காலியில் கூறினார் [இ]

# கொழும்பு மாநகரசபை தேர்தல்

[கொழும்பு]

கொழும்பு மாநகர சபைத் தேர்தல்விரைவில் நடைபெறும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸ கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார், [க]

# சிங்கள ஆசிரியர்கள் வடக்குக்கு மாற்றம்

[காலி]

காலியைச் சேர்ந்த பல சிங்கள ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிங்களப் பாடசாலைக்கு போகும்படி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது

வந்துரம்ப மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த, சேவை நீடிப்பில் இருக்கும் ஆசிரியர் ஒருவரும் இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவர் அடுத்த மாதம் 7-ந் திகதி இணைப்பாற உள்ளார். [அ]

# விபத்தில்மேலவை உறுப்பினர் பலி

சென்னை, பெப் 19

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சாலை விபத்து ஒன்றில் தமிழ் நாடு சட்ட மேலவை உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் மரணமானார். [உ]

# வருடாந்த பொதுக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த பொதுக் கூட்டம், இன்று பிற்பகல் 4 மணிக்கு, சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# தேர்தலுடன்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நான் உடனே "சிங்களப் பிரதேசங்களிலுமுள்ள தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க தமிழர்களின் பெயர் விலாசமும் எடுக்கிறீர்களா?' என்று கேட்டேன்.

'அதுபற்றி தெரியாது என்று கூறினார்கள்.

2 நாள் கழித்து சிங்களவரின் பெயர்பட்டியல் தருவதாக கூறினேன்.

2நாள் கழித்துகான்ஸ்டபிள் மாணிக்கவாசகமும் ஒருசிங்கள பொலிஸாரும் வந்தனர்.

"பட்டியல் தயாராகிமுடியவில்லை, மற்றொருநாள் வருமாறு" கூறினேன்.

அப்போது மாணிக்கவாசகரை அனுப்பினால் கொடுத்து விடுவீரா? என சிங்களப் பொலிஸார் கேட்டார்.

'ஆம்' என்றேன் பின் மாணிக்கவாசகர் வந்தபோது பட்டியலைக் கொடுத்துவிட்டேன்.

இதுபற்றி மற்ற கிராம சேவகர்களையும் கேட்டேன் தாங்களும் பட்டியல் தயாரிப்பதாக கூறினார்கள்.

வண்ணை தென்மேற்கு கி. சே. திரு. ஐயாத்துரை, சோனகதெரு கி. சே. திரு. டொமினிக், கொழும்புத்துறை கி. சே. திரு. வேலுப்பிள்ளை, குருநகர் கி. சே. திரு. கணபதிப்பிள்ளை, யாழ்நகர் கி. சே திரு. சிவபாதசுந்தரம் ஆகியோரும் பட்டியல் கொடுக்கப் போவதாக சொன்னார்கள். (க)

# யாழ். மாத்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வர்கள் குழுவே மேற்படி சிபார்சை செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்துள்ள பல்கலைக் கழகக் குழு, இந்த மருத்துவ பீடத்தை கைதடி ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் ஆரம்பிக்கவேண்டும் என்றும், இதற்கான பயிற்சிகளை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

'தென்னிலங்கையைப் பொறுத்தவரை மாத்தறையில் மருத்துவபீடம் ஆரம்பிக்க வேண்டும் என்றும் இதற்கான பயிற்சிகளை காலி ஆஸ்பத்திரியில் வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

மருத்துவ பீடங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது இந்த ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ள பல்கலைக் கழகக்குழு, புதிய திட்டங்களுக்கமைய, யாழ்ப்பாணம், காலி ஆஸ்பத்திரிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளது.

# இறைபுகழ்வாழி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுதந்திரதினத்தன்று புங்கங்குளம் சந்தியிலிருந்து 'அடிமை ஊர்வலம்' நடத்தி பிரதான வீதியில் வைத்துபொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த இரு வாரங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த திரு அலோசியஸ் (இறைபுகழ்வாழி) நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் மீண்டும் ஏப்ரல் மாதம் 7ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கூறி விடுதலை செய்யப்பட்டார்.

# ஸ்ரீ சோமாஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்றும், ஆசிரியர்கள் எப்படித் தமது கடமையைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தின் அமைப்பாளரான திரு. க. வீரசிங்கம் தமது உரையில் நிர்வாகம், ஆசிரியர், பெற்றோர், மாணவர்களின் ஒற்றுமையைப் பாராட்டினார்.

அதிபர் திரு. கனகராஜா தமது உரையில், மிரிக்காடு, பச்சிலைப்பள்ளி, நாச்சிமார் தோட்டக்காடு, புலோப்பளையிலுள்ள பள்ளிக்கூடக்காணிகளை விற்று, அப்பணத்தைஇக் கல்லூரியின் கட்டிடங்களைப் பூர்த்தி செய்யவேண்டுமென்றார்.

இது ஒரு பிரேரணையாகக் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பெற்றோர் ஆசிரியசங்கச்செயலாளர் திரு. சோமசுந்தரம். இளைஞர் பேரவை திரு. ஆறுமுகம் வேலுப்பிள்ளை, திரு. நாதன் ஆகியோரும் உரையாற்றினர். (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka